## சூரிய சக்தித் தொகுதியொன்றை பொருத்தும் போது

- இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா இலெக்ற்றிசிட்டி ப்ரைவட் லிமிட்டட்டின் பரிந்துரைகளுக்கு அமைவாக மற்றும் தரநிர்ணயங்களுக்கு ஏற்ப இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களை தெரிவு செய்தல் வேண்டும்.
- சூரிய சக்தித் தொகுதிகளை நிறுவும்போது இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் (SLSI : 1522) மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கட்டளைகள் விதிமுறைகளுக்கு அமைவாக உயர்தரத்திலான செற்றிறன்மிக்க சூரிய சக்தி பெனல்கள், இன்வர்டர், சூரிய சகத்தித் தொகுதிகளை வழங்கும் அனுபவமுள்ள தொழில்நுட்ப அதிகாரிகளைக்கொண்ட நிறுவனத்தைத் தெரிவுசெய்தல் முக்கியமாகும்.

## சூரிய சக்தி சமர் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்க நிறுவனங்கள்

**இலங்கை மின்சார சபை மற்றும் பிரதேச மின்சார பொறியிளலாளர் அலுவலகங்கள்**
இல 50,
ஸ்ரீ சித்தம்பலம் ஏ கார்டினம் மாவத்தை,
கொழும்பு 02
0112 324 471
www.ceb.lk

**லங்கா இலெக்ற்றிசிட்டி ப்ரைவட் லிமிட்டட் மற்றும் பிரதேச மின்சார பொறியிளலாளர் அலுவலகங்கள்**
இல. 411, காலி வீதி,
கொழும்பு 03
0112 371 600
www.leco.lk

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை**
5ஆவது கட்டடம், முதலாவது மாடி, BMICH, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07.
0112 697 375 www.energy.gov.lk 011- 2682534

**HOTLINE : 0112 677 445**

www.powermin.gov.lk Soorya Bala Sangramaya

# சூரிய சக்தி சமர் செயற்றிட்டத்தின் முன்னற்றேகரமான திருப்பங்களுடன் நீங்களும் இணையுங்கள்

'நாட்டை நேசிக்கும் மக்கள் சுற்றாடலை நேசிப்பர்,
சுற்றாடலை நேசிக்கும் மக்கள் சூரிய சக்தியை நேசிப்பர்'

**மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு**


# සූර්ය බල සංග්‍රාමය

# சூரிய சக்தி சமர்

## சூரிய சக்தியின் முன்னேற்றகரமான திருப்பம்

| | | |
|---|---|---|
| வீடுகள் | சமய அனுஷ்டான நிலையங்கள் | சுற்றுலா ஹோட்டல்கள் |
| வியாபார நிலையங்கள் | அலுவலகங்கள், | தொழிற்சாலைகள் |

## பத்து இலட்ச சூரிய சக்தி நிலையங்கள்



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

இலங்கை மின்சார சபை

லங்கா இலெக்ற்றிசிட்டி ப்ரைவட் லிமிட்டட்

2050 ஆம் ஆண்டாகும்போது இலங்கைக்குத் தேவையான முழுமையான மின்சாரத்தை உள்நாட்டு/ மீள்புத்தாக்க மூலங்களின் ஊடாக பெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இதற்கான ஆரம்பப்படியாக மினசாரப் பாவனையாளர்களையும் மின்னுற்பத்தியாளர்களாக உற்பத்திச் செயற்பாடுகளில் இணைத்துக்கொள்வதன் மூலம் தமது வீடுகளின் கூரைகளில் நிர்மாணிக்கப்படும் சிறிய சூரிய சக்தித் தொகுதிகள் முறைமையை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் செயற்றிட்டமாகிய இம்முறைமை "சூரிய சக்தி சமர்" எனும் பெயரில் செயற்படுத்தப்படுகின்றது. இதன் ஊடாக ஒரு மில்லியன் மின்சாரப் பாவனையாளர்களை மின்சார உற்பத்தியாளர்களாக மாற்றுவதற்கு உத்தேசிப்பதுடன், இவ்வாறு உற்பத்தி செய்து தேசிய மின்சாரத்துடன் இணைக்கப்படும் மேலதிக மின்சாரத்துக்கு அரசாங்கம் அவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

எந்தவொரு மின்சாரப் பாவனையாளருக்கும், இச்செயற்றிட்டத்துடன் இணைந்துகொள்ள முடியுமாவதுடன், அதன் மூலம் தமது கூரையினை சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையமாக மாற்றலாம்.

**2020 ஆம் ஆண்டாகும் போது 200MW மற்றும் 2025 ஆம் ஆண்டாகும் போது 1,000MW கொள்ளளவுடைய சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்திசெய்வது செயற்றிட்டத்தின் நோக்காகும்.**

## இச்செயற்றிட்டத்தின் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பிரதிபலன்கள்

1. தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைந்த சுற்றாடலுக்கு உகந்த மின்சார உற்பத்திக்கு பங்களிப்பு செய்யும் சந்தர்ப்பம். அதனூடாக மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் வாய்ப்பு.
2. 7 வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்துவதற்குரிய அரச அல்லது தனியார் வணிக வங்கியிலிருந்து சலுகையடிப்படையிலான கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்.
3. சூரிய சக்தி சமர் செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மூன்றில் ஏதாவதொரு முறையில் நாட்டின் எந்தவொரு இடத்திலும் மின்சாரப் பாவனையாளருக்கு பிரதிபலன்களைப் பற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
4. ஒன்றிணைக்கப்பட்ட நிகர மானித் தொகுதியை பொருத்துவதற்கு வீட்டில் தற்போதுள்ள மின்சார முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான தேவையின்மை.

## இச்செயற்றிட்டத்தின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் பிரதிபலன்கள்

1. சூரிய சக்தி இலவசமாகக் கிடைக்கும் சக்தி மூலம் ஆகையால், நிலக்கரி மற்றும் மசகெண்ணெய் என்பவற்றுக்கான அந்நிய செலாவணியைக் குறைத்து அவற்றை நாட்டினுள் சேமிக்க முடியுமாதல்.
2. சுற்றாடலுக்கு உகந்த சூரிய சக்திப் பாவனையினால் வருடத்துக்கு 150,000 மெ.டொன் காபனிரொட்சைட் வாயு வளிக்கு விடுவிக்கப்படுவதைத் தவிர்க்க முடியுமாதல். மற்றும் பூகோளம் வெப்பமடைதலை தவிர்ப்பதற்கு எம்மாலான பங்களிப்பை இதன் மூலம் மேற்கொள்ள முடிதல்.
3. சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையங்கள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்படுவதன் மூலம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் நிலையியற் தன்மை உறுதிப்படுத்தப்படும்.
4. மின்சார வழங்கல் மற்றும் விநியோகத்தில் ஏற்படும் விரயம் குறைக்கப்படும்.
5. தெளிவுள்ள சமூகம் மற்றும் சுற்றாடலுடன் உறவாடக்கூடிய சமுதாயம் உருவாதல்.
6. நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் உருவாதல்.
7. குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு புதிய முறையின் ஊடாக மின்னுற்பத்தியாளர்களாக மாறுவதன் மூலம் வருமானம் பிரிந்து செல்வதிலுள்ள சிக்கல் குறைவடைதல்.


## ஒரு மாத்தினுள் உற்பத்தி செய்யத்தக்க மின்சார அலகின் அளவு

**1kW** சூரிய சக்தித் தொகுதியொன்றின் மூலம் மாதமொன்றுக்கு **110-130 kWh** மின்சார அலகுகளை உற்பத்தி செய்ய முடியும்.

## இலங்கை மின்சார சபை மற்றும் LECO நிறுவனம் ஊடாக மேலதிக மின்சாரத்துக்காக உரிய பிரதிபலன்களைப் பெறக்கூடியவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கும் முறை

| கொடுப்பனவு வழங்கப்படும் முறை | அலகொன்றிற்குரிய கொடுப்பனவு ரூ. (kWh) |
|---|---|
| 1. முதல் 7 வருடங்களுக்கு | 22.00 |
| 2. 8ஆவது வருடம் முதல் 20 ஆவது வருடம் வரை | 15.50 |

## சூரிய சக்தித் தொகுதியின் வடிவமைப்பு




## உங்கள் மின்சாரப் பாவனை முறைக்கேற்ப மற்றும் விருப்பத்திற்கேற்ப நாம் முன்வைக்கும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் மூன்றில் ஒன்றை தெரிவு செய்ய முடியும்.

### 1. நிகர மானி (Net Metering) முறை

வீட்டுக் கூரையில் பொருத்தப்பட்டிருக்கும் சூரிய சக்தி பெனல்கள் மூலமாக உற்பத்தியாக்கப்படும் மின்னலகுகள், பயன்படுத்தப்படும் மின்னலகுகளின் அளவை விடக் குறைவாயின், அவ்வித்தியாசத்துக்கு மட்டும் வாடிக்கையாளர் இலங்கை மின்சார சபைக்கு பணம் செலுத்தல் வேண்டும்.

**(உற்பத்தியாக்கப்படும் மின்னலகுகளின் மேலதிகம் இருப்பின் தேவையின்போது பயன்படுத்துவதற்கு சேமிக்கலாம். இம்முறையில் வாடிக்கையாளருக்கு பணம் கிடைப்பெற மாட்டாது.)**

### 2. நிகர கணக்கியல் (Net Accounting ) முறை

வீட்டுக் கூரையில் பொருத்தப்பட்டிருக்கும் சூரிய சக்தி பெனல்கள் மூலமாக உற்பத்தியாக்கப்படும் மின்னலகுகள், பயன்படுத்தப்படும் மின்னலகுகளின் அளவை விட அதிகமாயின், அவ்வித்தியாசத்துக்கு மட்டும் வீட்டுரிமையாளருக்கு இலங்கை மின்சார சபை கொடுப்பனவுகளை வழங்கும்.

**(உற்பத்தியாக்கப்படும் மின்னலகுகள், பயன்படுத்தப்படும் மின்னலகுகளின் அளவை விடக் குறைவாயின், அவ்வித்தியாசத்துக்கு மட்டும் வீட்டுரிமையாளர் இலங்கை மின்சார சபைக்கு பணம் செலுத்தல் வேண்டும்.)**

### 3. நெட் ப்ளஸ் (Net Plus) முறை

வீட்டுக் கூரையில் பொருத்தப்பட்டிருக்கும் சூரிய சக்தி பெனல்கள் மூலமாக உற்பத்தியாக்கப்படும் மின்னலகுகளை மொத்தமாக இலங்கை மின்சார சபை கொள்வனவு செய்து மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீட்டுரிமையாளருக்கு கொடுப்பனவுகளை வழங்கும்.

**வீட்டின் மின்சாரப்பட்டியல் தற்போதுள்ள முறைக்கமைய காணப்படுவதுடன் அதற்குரிய தொகையை மின்சார சபைக்கு இப்போது செலுத்துவதைப் போன்று செலுத்துதல் வேண்டும்.**